★ விலை ரூபா 1:00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 ஆனி 18 நம். 20 இதழ் 141

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 2—7—83

## திருகோணமலையில் நேற்று
# நால்வர் கொலை!

(திருகோணமலை நிருபர் வி. வி. சுந்தரம்)

திருகோணமலைப் பகுதியில் காடையர்களின் வெறியாட்டத்துக்கு நள்ளிரவுக்குச் சற்றுப் பின்னதாக நேற்று அதிகாலை ஒரு மணிக்கு பெண்கள் உட்பட நால்வர் வாள் வெட்டுக்கும், துப்பாக்கிச் சூட்டுக்கும் இலக்காகித் துடிதுடித்து மாண்டார்கள்.

இக்கோரக் கொலைகள் பன்குளம் என்ற இடத்திலிருந்து இருபது மைல் உள்ளூர இருக்கும் பறையன் குளம் என்ற இடத்தில் நடந்துள்ளது.

32 வயது பூவாயி என்ற பெண்ணும், வள்ளியம்மை என்ற வயோதிப மாதுவும், வடிவேலு (42 வயது), இன்னையா (60 வயது) என்பவர்களுமே பலியானவர்களாவர்.

வாள்வெட்டு, துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் இவர்கள் உடலில் காணப்பட்டன. பலர் கடும் காயங்களுடன் நேற்று மாலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

[8ம் பக்கம் பார்க்க]

## பெற்றேல் ஊற்றித் தீவைத்தனர்
## கோண்டாவிலில் 'யாழ். தேவி'
# எரிந்து சாம்பரானது!

(ஏ. வி. மாணிக்கம்)

கொழும்பிலிருந்து வந்த 'யாழ்தேவி'யின் ரயில் பெட்டிகள் கோண்டாவில் ரயில் நிலையத்தில் நேற்று மாலை மூற்ருகத்தீக்கு இரையானது! சுமார் முப்பதுக்குமேற்பட்ட இனந்தெரியாத இளைஞர்கள் ரயில் வந்து நின்றதும், துப்பாக்கிமுனையில் பிரயாணிகளை இறக்கி விட்டு பெற்றேல் ஊற்றித்தீவைத்தனர்! ரயிலின் என்ஜின்தவிர இணைக்கப்பட்ட பத்துப்பெட்டிகளும் இரண்டுமணிநேரமாக ஜுவாலை விட்டு எரிந்து சாம்பராகின! இதனுல் ஆறுகோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது.

இத்தீவைப்பினுல் புகையிரத எஞ்ஜினுக்குச் சிறு சேதம் ஏற்பட்டது.

ரயில் தண்டவாளத்துக்குப் போடுவதற்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்த சிலிப்பர்க்கட்டைகளும் எரிந்து சாம்பரானது!

நேற்றும் பிற்பகல் 4-30மணியளவில் இப்பயங்கர தீவைப்புச் சம்பவம் நடைபெற்றது.

கொழும்பிலிருந்து காலை 6-50க்குப் புறப்பட்ட யாழ் தேவி பத்துப் பெட்டிகளுடன் காங்கேசன்துறை நோக்கிப் வந்தது.

வழக்கமாக வரும் நேரத்திற்குச் சற்றுத் தாமதமாகவே ரயில் வந்தது. கோண்டாவில் ரயில் நிலையத்தில் யாழ்தேவி நின்றதும் சுமார் முப்பதுக்கு மேற்பட்ட இனந்தெரியாத நபர்கள் ரயில்பெட்டிகளுக்குள் சென்று பிரயாணிகளை இறங்கிச் செல்லுமாறு கேட்டுக்கொண்டனர். இதனுல் பீதியடைந்த பிரயாணிகள் தங்கள் உடைமைகளுடன் இருக்கைகளைவிட்டு எழுந்து ஓடிச் சென்றுர்கள்.

பிரயாணிகள் இறங்கிச்சென்றதும் இனந்தெரியாத நபர்கள் தாங்கள் வைத்திருந்த கொள்கலன்களிலிருந்து பெற்றேலை ஊற்றித் தீவைத்ததாகத் தெரியவந்துள்ளது.

பெட்டிகளுக்குப் பிடித்த தீ எஞ்ஜினுக்குப் பரவியபோதும், இச்சம்பவம் அறிந்து ஸ்தலத்துக்கு விரைந்துசென்ற யாழ். பொலிசார் மேலும் தீ பரவாமல் அணைத்ததால் எஞ்ஜின் சேதமடையவில்லை.

யாழ். பொலிஸார் தண்ணீர் பவுசருடன் சென்றே என்ஜின் தீயை அணைத்தனர்.

இத் தீவைப்பு சம்பவத்தைத் தொடர்ந்து, என்ஜின் சாரதி, மற்றும் ஊழியர்கள், ரயில் நிலைய அதிகாரி ஆகியோர் இடத்தைவிட்டு ஓடிச்சென்று விட்டார்கள்.

பெட்டிகளுக்கு வைக்கப்பட்ட தீ இரு மணித்தியாலங்களாக ஜுவாலைவிட்டு எரிந்தது.

பலாலியிலிருந்து தீயணைக்கும் படையினர் வந்தபோதும் அவர்களால் இத் தீயை அணைக்கமுடியவில்லை என்றும், அதேபோல், கடற்படையினர்

(8-ம் பக்கம் பார்க்க)

## ஆனைக்கோட்டையில்
# பஸ்ஸுக்குத் தீ!

(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றுக்கு இனந்தெரியாத கோஷ்டி ஒன்றினுல் வைக்கப்பட்ட தீயை, பஸ்ஸின் சாரதியும் நடத்துனரும் பொதுமக்களும் சேர்ந்து உடனடியாக அணைத்ததால் பஸ் முற்ருக எரியவில்லை.

பஸ்ஸின் ஒரு 'சீட்' மாத்திரந்தான் எரிந்து காணப்பட்டது.

ஆனைக்கோட்டை உயரப் புலம் என்ற இடத்தில் வைத்தே இத்தீவைப்புச் சம்பவம் நேற்றுக்காலை 6-15 மணியளவில் நடைபெற்றது.

கோண்டாவில் டிப்போவைச் சேர்ந்த 29ஸ்ரீ 1968 பஸ்ஸுக்கே தீவைக்கப்பட்டது.

அதிகாலை 5 மணிக்கு யாழ். பஸ்நிலையத்திலிருந்து இப்பஸ் ஆனைக்கோட்டைக்குப் புறப்பட்டு பின்னர் இருபாலை நோக்கிச் செல்லும்பொழுது உயரப் புலத்தில் வைத்து 4 இனந்தெரியாத நபர்கள் பஸ்ஸை மறித்து, ஆயுதமுனையில் பஸ்

(-5ம் பக்கம் பார்க்க)

## யாழ்.சிறைச்சாலையில்
## டாக்டரும், கோவையும்

(யாழ்ப்பாணம்)

தமிழ் ஈழ விடுதலை அணித் தலைவர் டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கமும், செயலாளரும், 'சுதந்திரன்' ஆசிரியருமான கோவை மகேசனும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் யாழ் சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ளனர். யாழ். பொலிஸ் நிலையத்தில் இவர்கள் நேற்று விசாரிக்கப்பட்டனர்.

## யாழ். மாவட்டத்தில்
# பூரண ஹர்த்தால்!

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை மாவட்டத்தில் நடைபெறும் வன்முறைச் சம்பவங்களைக் கண்டித்து யாழ். மாவட்டத்தில் பூரண ஹர்த்தால் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களையும் சேர்ந்த மாணவர்கள் விரிவுரைகளைப் பகிஷ்கரித்துள்ளனர்.

பல்கலைக்கழக வளவுக்குள் கறுப்புக் கொடிகளைக் கட்டி, தொடர்ந்தும் தமது துக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

பாடசாலைகளின் வகுப்பறைகளில் மாணவர்களின் வரவு குறைவாகக் காணப்பட்டதால் அரை நேரத்துடன் பாடசாலைகள் மூடப்பட்டன. சில பாடசாலைகளில் ஆசிரியர்கள் மாத்திரம் இருந்ததால் அவை இயங்கவில்லை.

யாழ். தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்திருந்தனர்.

யாழ். நகரிலும் மற்றும்பகுதிகளிலும் கடைகள், வர்த்தக

(5ம் பக்கம் பார்க்க)

## 'ஈழநாடு' பத்திரிகைபடித்த மாணவர்கள் தாக்கப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அருகில் 'ஈழநாடு' தினசரிப் பத்திரிகை படித்துக் கொண்டிருந்த மாணவர்கள் சிலர் தாக்கப்பட்டார்களாம்.

ஈழநாடு பத்திரிகையா வாசிக்கிறீர்கள் என்று கேட்டு அம்மாணவர்களைக் கைகளாலும் சப்பாத்துக் கால்களாலும் ஆயுதப் படையினர் தாக்கியதாகக் கூறப்படுகின்றது.

## கடற்படைத் தளபதி
## திருமலை இணைப்பு அதிகாரி

(திருகோணமலை)

திருகோணமலையில் நடைபெற்றுவரும் வன்செயல்களைக் கட்டுப்படுத்தி அமைதியை நிலைநாட்டும்பொருட்டு கடற்படைத்தளபதி றெயார் அட்மிரல் அசோக டி. சில்வா ஒருங்கிணைப்பு அதிகாரியாக நேற்றுமுதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை நிலவரம் தொடர்பாக பொலிஸ் மாஅதிபர் திரு. ருத்ரா ராஜசிங்கம் ஜனாதிபதியிடம் கையளித்த அறிக்கையைத்

(8-ம் பக்கம் பார்க்க)

85 AUG· A/L விஞ்ஞானம்
2ம் பிரிவு

இன்று ஆரம்பம்

MASTER
INSTITUTES

B. M. C. லேன், யாழ்ப்பாணம்.

(7800)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

திருநெல்வேலி அரசடி ஒழுங்கையில் 2 பரப்புக் காணியும் அத்தியடி புதுவீதியில் 2 பரப்புக்காணியுடன் வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு மணி சேவிசஸ், தடன்லப் ஸ்ரோஸ் 234(446), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி, 23541 7771

சகல வேலைகளும் செய்யக் கூடிய மரவேலை இயந்திரம் விற்பனைக்குண்டு. விபரம் கிறீ கிருஷ்ண விலாஸ், (ஸ்ரேசன் முன்பாக), கண்டி றோட், கொடிகாமம். (7781)

யாழ்ப்பாணம் கலைப்புலவர் வீதி 22/1-ம் இலக்கத்தில் ½ பரப்பு காணி வீட்டுடன் தண்ணீர் வசதியுடன் விற்பனைக்குண்டு. விலை விபரங்களுக்கு வை கிருஷ்ணசாமி, 8/3. பெருமாள் கோவிலடி மேற்கு வீதி, யாழ்ப்பாணம். (7784)

தும்பளை மணியகாரன் சந்திக்கு அருகாமையில் வீடு கட்டுவதற்கேற்ற 5½ பரப்புத் தென்னம் காணி விற்பனைக்குண்டு தொடர்பு கொள்க: நா. இலட்சுமிப்பிள்ளை, ஒல்லை, திக்கிரி, ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை. 7798

சோக்கேஸ். அலுமாரி, பேக்கரிசைக்கிள், சில்லறைக்கடைக்குத் தேவையான தளபாடங்கள். மணிக்கூடு திருத்தும் உபகரணங்கள் ஆகியன விற்பனைக்குண்டு. அம்பேசலோஸ் வாச் வேக்ஸ், 138, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 7789

ஒஸ்ரின் JU / 250 டீசல் வான் நல்லநிலையில் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும். நோர்தேண் இண்டஸ்றீஸ் கொக்குவில் 7782

உரும்பராய் கிழக்கு, இளமலை - நிலப்பரப்பு ஏழுபரப்பு காணி விற்பனைக்குண்டு. தோட்டம் செய்யவும், வீடு கட்டவும் உகந்தது. இரு கிணறுகளிலும் பங்குண்டு. விபரங்களுக்கு: திருமதி. இராசரத்தினம், இந்திரா மாளிகை, டிஸ்பென்சரி, ஒழுங்கை, உரும்பிராய். 7812

## தேவை

ஆங்கிலத் தட்டெழுத்தறிவுடன் முப்பது வயதிற்கு மேற்பட்ட குமாஸ்தா தேவை. 13, இரண்டாம்குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 7776

## தேவை

ஜவுளி விற்பனையில் திறமைமிக்க விற்பனையாளர்கள் இன்னும் இருவர் தேவை. அத்துடன் திறமையான சமையற்காரர் ஒருவரும் தேவை. திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் வரவும். 'ரகுலசூரியன்ஸ்', 122, பிரதான வீதி, பருத்தித்துறை. 7802

இசைக்கு இறைவனடிகு மிகவிற்கு ஒரு ஆள் தேவை. அனுபவமுள்ளவராயிருந்தால் விரும்பத்தக்கது. நேரில் தொடர்பு கொள்ளவும். எஸ். பொன்னையா மெயின் வீதி, பருத்தித்துறை. 7733

முன்னணி பொறியியல் நிறுவனமொன்றுக்கு அனுபவமுள்ள வெல்டேர்ஸ், ரேணேர்ஸ் பொருத்துனர்கள் உடன் தேவை. அனுபவத்துக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். விண்ணப்பிக்கவும்! விளம்பர இலக்கம்; 7806, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 7806

யாழ். நகரில் பிரபல்யமுள்ள வர்த்தக நிறுவனமொன்றுக்கு 10 வருட அனுபவமுள்ள பைப் வேலை செய்பவர்கள், மின்னியல் வேலை செய்பவர்கள், மோட்டார் பைண்டிங் வேலை செய்பவர்கள் தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம்! 7809, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 7809

## காணவில்லை

28-6-83ம் திகதி யாழ் புகையிரதநிலைய ஒழுங்கையில் எமது அடையாள அட்டைகள் புகைப்பட பிரதிகள் அடங்கிய ஒரு உறை காணமல் போய்விட்டது! இதைக் கண்டெடுப்பவர்கள் யாழ். புகையிரத நிலையத்தில் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். தகுந்த சன்மானம். கொடுக்கப்படும். க. காராளசிங்கம், ம. சண்முகலிங்கம், யாழ் புகையிரதநிலையம், யாழ்ப்பாணம். 7811

**வியாபாரம் பெருக**

**விளம்பரம் செய்க**

## தவறிவிட்டது

தம்பையா - குருநாதபிள்ளையின் F 030009 இலக்க பாஸ்போர்டும், சவுதி அரேபியா செல்வதற்கான விமான ரிக்கற்றும் இன்னும் சில ஆவணங்களும் கொண்ட தோல்பை ஒன்று கன்னாதிட்டி—காங்கேசன் துறை புகையிரத நிலையத்திற்கிடையில் 28-6-83 இரவு யாழ்தேவியில் தவறி விட்டது. கண்டெடுத்தவர் தயவு செய்து ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். த. தம்பிராசா, 239/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 7801

30-6-83 அன்று காலை 10 மணியளவில் கொக்குவில் கிராம சேவையாளரின் அலுவலகத்திற்கும், கொக்குவில் புகையிரத நிலையத்திற்குமிடையில் 631231527V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் விலாசத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். சிவனடியார் வியாசலானந்தசிவம், 24, பிரம்படி ஒழுங்கை, கொக்குவில். 7804


## குத்தகைக்கு

யாழ். நகர் காங்கேசன் துறை வீதி, நவீன சந்தைக்கு அண்மையில் இருமாடிகளைக் கொண்ட 7000 சதுர அடிகளை உள்ளடக்கிய சகல வசதிகளையுங்கொண்ட புதிய கடை குத்தகைக்குண்டு.

பிள்ளையார்
மெற்றல் வேக்ஸ்
251, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்.

7803

## இன்று
### 4-வது
## நினைவு அஞ்சலி



அமரர்

**S. P. குருசாமி**

(பொலிஸ் இன்ஸ்பெக்டர்)

தோற்றம்: 15-11-1922
மறைவு: 07-01-1979

ஆத்ம சாந்திக்கு இறைவனை இறைஞ்சும், மனைவி, ஆசைமகள், பேரப்பிள்ளைகள் ரமேஷ், பிரகாஷ், ஆகாஷ், பிரதீஷ், மருமகன். 204, மானிப்பாய் வீதி, ஒட்டுமடம், யாழ்ப்பாணம். 7767

## சமாதான நீதவான்

[சாவகச்சேரி]

வரணி நாவற்காட்டைச் சேர்ந்தவரும், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாவற்காடு கிளையின் தலைவருமான திரு. சுப்பிரமணியம் நடேசபிள்ளை புதிய சமாதான நீதவானாக, சாவகச்சேரி நீதிமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். [உ]

## வீடு விற்பனைக்கு

சண்டுக்குளி ஆண் / பெண் பாடசாலைக்கு அண்மையில் 2 பரப்புக் காணியும், வீடும் சகல வசதிகளுடன் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க. சோதிலிங்கம், 54/5, சென்ற் ஆன்ஸ் மூன் ஒழுங்கை, கொழும்புத்துறை, வீதி, சண்டுக்குளி, யாழ்ப்பாணம். [7785]

புங்குடுதீவு

## அருள்மிகு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம்

8-7-83 வெள்ளிக்கிழமை காலை 9-00 மணி
கொடியேற்றம்

10-7-83 ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணி
விசேட பூசை. தொடர்ந்து
அருள்மிகு அந்தோனியார் தேர்ப்பவனி

12-00 மணி: அன்னதானம்

★ பக்தர்கள் செலுத்தும் காணிக்கைகளை தொண்டர்கள்மூலமோ அல்லது நேரடியாகவோ வழங்கவும்.


அருட்திரு. எம். ஆர், இராசநாயகம்
அடிகள் (பங்குத் தந்தை)யும்
நிர்வாகக்குழுவும்
[7796]

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

### திரு. வெற்றிவேலு கந்தசாமி

(இளைப்பாறிய வவுனியா கல்வி அதிகாரி)

மலர்வு: 17-01-23 உதிர்வு: 02-06-83



எமது அன்புத் தெய்வத்தின் மரணச் சடங்கில் பங்கு பற்றி ஒத்தாசைபுரிந்தோர்க்கும், அனுதாபச் செய்தி அனுப்பியோர்க்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இன்று அந்தியேட்டிக் கிரியை நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்களை அழைக்கின்றோம்.

"அருள் வாசா",
தபாற் கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

திருமதி கந்தசாமி
குடும்பத்தினர்
7797

## வெற்றிடங்கள்

தொழிற்சாலை மேற்பார்வையாளர் -
(FACTORY SUPERVISOR)

எண்ணிக்கை 3

மேற்கூறப்பட்ட வெற்றிடங்களுக்கு பின்வரும் தகைமையுடைய ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. வயதெல்லை: 25 - 45 வயதுக்கிடைப்பட்டவர்கள்
2. கல்வித் தகைமை: ஆகக்குறைந்தது G.C.E [சாதாரணம்] சித்தி.
3. ஆங்கில அறிவு: எழுதவும், கடிதமூலம் தொடர்பு கொள்ளவும் தகுதியுடையவர்கள்
4. அனுபவம்: (a) ஐம்பதுக்கு (50) மேற்பட்ட ஊழியர்களை மேற்பார்வைசெய்வதில் அனுபவம் பெற்றவர்கள்
   (b) அடிப்படை பொறியியல் சம்பந்தமான அறிவு அவசியம்

மேற்கூறிய தகைமைகளை நிரூபிக்கும் சான்றிதழ்களின் பிரதிகளுடன் விண்ணப்பங்கள் 10-07-83க்கு முன் கிடைக்கக்கூடியதாக கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பிவைக்கப்படல்வேண்டும்.

பொதுமுகாமையாளர்

அலுமீனியம் இண்டஸ்றீஸ் (சிலோன்) லிமிட்ட்

ரோலர் தொழிற்சாலை

மாவட்டபுரம். தெல்லிப்பளை.

[7788]

பெற்றோர்களே!

## ஓர் நற்செய்தி

உங்கள் பிள்ளைகள் G.C.E O/L தேர்வில்
திறமைச்சித்தி பெறவேண்டுமா?
3 பிரதான பாடங்களில்

### 5 மாத விசேட துரித போதனை

அனுபவம், ஆற்றல் மிக்க ஆசிரியர்களின் இணைந்த சேவை

ஆங்கிலமொழி: திரு. T N. பஞ்சாட்சரம்
கணிதம்: திரு S. வரதராஜன்
விஞ்ஞானம்: திரு. R சூரியகுமார்

### ஆரம்பம் 9-7-83

மாதக்கட்டணம்: ரூபா 45/-
வகுப்புக்கள்: சனி, ஞாயிறு தினங்களில்.

- ✶ இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்
- ✶ வினா - விடைப் பயிற்சிகள்

**ASTAN INSTITUTE**
166/1, HOSPITAL ROAD, JAFFNA.

# "தெற்காசியப் பிராந்தியத்தில் அமைதி நிலவ இந்தியாவின் பாதுகாப்பு உறுதி அவசியம்

## பிரதமர் இந்திரா கூறுகிறார்

புதுடில்லி ஜூலை 1

"தெற்காசியப் பிராந்தியத்தில் அமைதி பாதுகாக்கப்படுவதற்கு இந்தியாவின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டியது அவசியமாகும்,"

இவ்வாறு இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தி அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு ஜோர்ச் ஷீல்ஸ் இடம் எடுத்துக் கூறியுள்ளார்.

நேற்று புதுடில்லியில் இருதலைவர்களும் தனித்தனியே 75 நிமிடங்கள் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தனர் இவர்கள் பேச்சுவார்த்தையில் வேறு எவரும் பங்கு பற்றவில்லை முன்னதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் இந்திய வெளியுறவு அமைச்சருடன் இருதரப்பு உறவுகள், வர்த்தகம் குறித்து பேச்சு நடத்தியமையிலும் இந்திரா-ஷீல்ஸ் பேச்சுவார்த்தையில் உலகபொது விடயங்கள்பற்றிய பேச்சுக்களே முக்கிய இடம் பெற்றன.

இந்திய ஜனநாயகத்தில் உறுதியான கட்டுப்பாட்டை கொண்டிருப்பதோடு எல்லா மக்களும் ஜனநாயகத்தில் அசையாத நம்பிக்கை கொண்டு அதனைப் பேணிக்காத்து வருகின்றனர். இந்தியாவின் அமைதி, பாதுகாப்பு, இப்பிராந்திய அமைதி என்பன வற்றை பேணுவதில் இந்தியா முழு மூச்சுடன் பாடுபட்டு வருகிறது அத்துடன் உலகபொது அமைதி, சமாதானம் என்பவற்றை பேணுவதில் உலக நாடுகளுடன் இந்தியா பூரண ஒத்துழைப்பு வழங்கி வருகிறது" என்றும் இந்திராகாந்தி வெளியுறவு அமைச்சரிடம் எடுத்துரைத்தார்.

இந்திய வெளியுறவு அமைச்சர் திரு பி. வி. நரசிம்மராவ் அளித்த விருந்தொன்றில் பேசிய அமெரிக்க வெளியுறவு அமைச்சர் இருதரப்பு உறவுகள், வர்த்தகம் என்பன குறித்து இந்தியாவுடனான பேச்சுக்கள் திருத்தியான பலனை அளித்துள்ளன என்றும் அமெரிக்கா இந்தியாவுடன் பல துறைகளிலும் நட்புறவை மேம்படுத்த விரும்புவதாகவும் தெரிவித்தார்.

தாராப்பூர் அணு ஆலைக்குத் தேவையான, ஏனைய நாடுகளிடம் இல்லாத உதிரிப்பாகங்களை வழங்குவதற்கு அமெரிக்கா ஒத்துக் கொண்டு விட்டதாகவும். இது குறித்த பிரச்சனை தீர்ந்து விட்டதாகவும், அமெரிக்காவும் இந்தியாவும் பலதுறைகளில் பரிவர்த்தனைகளை மேற்கொள்ள இணங்கி இருப்பதாகவும். பேச்சு வார்த்தையில் கலந்துகொண்ட இந்திய உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

(சு)

## சோவியத்-மே. ஜேர்மன் அதிபர்கள் சந்திப்பு

மாஸ்கோ ஜூலை 1

மேற்கு ஜெர்மன் அதிபர் ஹெல்மட் கோல் எதிர்வரும் திங்கட்கிழமை மாஸ்கோவில் சோவியத் அதிபர் யூரி அந்ரபோவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

சோவியத் - மேற்கு ஜெர்மன் உறவுகளில் ஏற்பட்டிருக்கும் குழப்பமான நிலைகளை தீர்த்து இருநாடுகளிடையேயும் திருப்தியான உறவுகளை ஏற்படுத்தவும் வர்த்தகம், பொருளாதார உறவுகளை மேம்படுத்தவும் இந்தப் பேச்சுவார்த்தை உதவும் என நம்பப்படுகிறது

மேற்கு - கிழக்கு நாடுகளின் ஏவுகணைப் பிரச்னை, சோவியத் அமெரிக்க உறவுகளில் ஏற்பட்டு வரும் விரிசல் என்பன குறித்தும் இருதலைவர்களும் பேசுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது (சு)

## பாம்பன் இராமேஸ்வரம் ரயில் சேவை

சென்னை ஜூலை 1

கடந்த ஞாயிற்றுக் கிழமை நிறுத்தப்பட்டிருந்த பாம்பன்-இராமேஸ்வரம் ரயில் சேவை மீண்டும் நேற்று முதல் செயற்படத் தொடங்கியுள்ளது

பலத்த காற்றினால் மணல் ரயில் பாதையை மூடிவிட்டதினால் ரயில் சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. பின்னர் மணல் அகற்றப்பட்டபின் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(சு)

## "உணவுத் தானியங்களை தடைகளாக! பாவிக்கக் கூடாது!"

லண்டன் ஜூலை 1

உலக நாடுகள் சில வேறொரு நாட்டின் மீது பொருளாதாரத் தடைகளை விதிக்கும் போது உணவு தானியங்களையும் பயன்படுத்தி வருகின்றன" என்று 36 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்ட உலக உணவுத்தாபனத்தின் 4 நாள் மகாநாட்டின் முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"சில வளர்ந்த நாடுகள் வளர்ந்து வரும் நாடுகள் மீது உணவுத்தானியங்களை இடைநிறுத்தி பொருளாதாரத் தடைகளை மேற்கொள்கின்றன, இது மனிதாபிமான மற்ற ஒரு செயலாகும். உணவுப் பொருட்கள் யாவும் எல்லோருக்கும் பொதுவானவை, இவற்றினை எல்லோரும் பெற்றுக்கொள்ளும்வகையில்செய்ய வேண்டியது எல்லா நாடுகளினதும் கடமையாகும்" என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (சு)

## தமிழ் நாட்டின் புதிய அமைச்சர்கள் பதவிப் பிரமாணம்

சென்னை ஜூலை 1

தமிழ்நாடு அமைச்சரவையில் புதிதாக சேர்த்துக்கொள்ளப்பட்ட 3 அமைச்சர்களும் சென்னை ராஜ்பவனில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

எம். ஆர். கோவிந்தன், பி. விஜய லட்சுமி, எஸ். ஆர். ராதா ஆகிய மூவருமே சத்தியப்பிரமாணம் செய்துகொண்டவர்கள்.

எம். ஆர். கோவிந்தன் பிற்பட்டோர் நலத்துறை அமைச்சராகவும் எஸ். ஆர். ராதா மீன்வள அமைச்சராகவும் விஜலட்சுமிகதர்துறை அமைச்சராவும் பொறுப்பேற்கவுள்ளனர். இவர்களையும் சேர்த்து தமிழ் நாடு அமைச்சரவையில் 21 பேர் அங்கம் வகிக்கின்றனர்.

(சு)

இப்பொழுது எங்கும் விற்பனையாகின்றன

NI என். ஐ

சைக்கிள் ரயர்கள்
அதி சௌகரியமான ஓட்டத்திற்கு
வாங்குங்கள்

என். ஐ சைக்கிள் ரயர்கள்
விலை ரூ. 42-60

நோர்தேண் இன்டஸ்ரீஸ்
(சைக்கிள் ரயர் உற்பத்தியாளர்கள்)
112, ஸ்ரான்லிவீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 23158

## திருகோணமலையில் நடைபெறும் வன்செயல்களை நிறுத்த ஐ. நா. சமாதானப் படை தலையிடவேண்டும்

### தமிழ்ஈழ விடுதலை அணி ஜனாதிபதி, தூதரகங்களுக்கு தந்தி

[யாழ்ப்பாணம்]

"திருகோணமலையில் நடைபெற்றுவரும் கொலை, கொள்ளை, தீ வைப்புச் சம்பவங்களை அரசினால் தடுத்து நிறுத்தமுடியவில்லை. ஐ. நா. சமாதானப் படை இதில் தலையிடவேண்டும். இந்த வன்செயல்களுக்கு அரசின் இனவாதப் பாதுகாப்புப் படைகளே பின்னணியிலுள்ளன."

இவ்வாறு கோரும் தந்தி ஒன்றினை தமிழ் ஈழவிடுதலை அணியின் தலைவர் டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம், செயலாளர் திரு. கோவை மகேசன் ஆகியோர் கூட்டாக ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு அனுப்பிவைத்துள்ளனர்:

தூதரகங்களுக்கு மகஜர்

விடுதலை அணித் தலைவரும். செயலாளர் நாயகமும், கூட்டாகக் கைச்சாத்திட்டு இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் உட்பட 17 வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் மகஜர் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளனர்.

அம்மகஜரில் கூறப்பட்டிருப்பதாவது:-

"திருகோணமலையில் தமிழர்கள் பரிதாபகரமானநிலையில் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். கொள்ளை, கொலை, தீ வைப்புச் சம்பவங்கள் சாதாரணமாக அங்கு இடம்பெற்று வருகிறது. அரசாங்கம் ஊரடங்குச் சட்டத்தை அமுல் செய்துள்ள வேளையிலேயே இச்சம்பவங்கள் இடம்பெறுகின்றன

"திருகோணமலையில் இடம்பெறும் தமிழ்இனக்கொலையை நிறுத்துவதற்கு நட்புநாடுகள் உடனடியாகத் தலையிடவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம். இந்த கொலைகளின் பின்னணியில் படைகளே செயற்படுகின்றன"

## மத்தியப் பிரதேச மந்திரி சபை மாற்றம்

பம்பாய் ஜூலை 1

மத்தியப பிரதேச அமைச்சரவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது,

8 புதிய அமைச்சர்கள் நியமிக்கப்பட்டதுடன் 3 அமைச்சர்களின் தரமும் கூடியுள்ளது. பிரதேசவை 2 அமைச்சர்களும் 3 அமைச்சரவைச் செயலாளர்களும் நீக்கப்பட்டுள்ளனர்,

மத்தியப்பிரதேசத்தில் இப்போதையமுதலமைச்சரின் பதவிக்காலத்தில் ஏற்பட்ட 8வது அமைச்சரவை மாற்றம் இதுவாகும்.

(சு)

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

### புதிய இரசாயனக் கட்டிடத்திற்கு மரத் தளபாடம் வழங்குதல்

புதிய இரசாயனக் கட்டிடத்திற்கு மரத் தளபாடங்களை வழங்குவதற்கும் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. அளவுகள் பற்றிய பட்டியல், மரத் தளபாடங்களின் விபரங்கள் அடங்கிய வரைப்படங்கள், ஏனைய விபரங்கள் ஆகியனவற்றை இப் பல்கலைக்கழக நிதியாளரிடமிருந்து 08-07-1983-ம் திகதிக்கு முன்னதாகப் பெற்றுக் கொள்ளமுடியும். இப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன் 25-00 ரூபாவுக்கு காசுக் கட்டளை/தபாற் கட்டளை அனுப்பப்படல் வேண்டும் கேள்விகளுக்கான முடிவு திகதி 18-07-1983 முற்பகல் 10-00 மணி ஆகும்.

பதிவாளர்

7810

வவனியா காந்திய இயக்க

## சேவைகள் யாவும் இடைநிறுத்தம்

# பால் உணவு பழுதடைகிறது!

### சமூகசேவை அமைச்சருக்கு வவனியா எம். பி. புகார்

(வவனியா)

காந்தீயத் தலைவர் திரு. டேவிட், செயலாளர் டாக்டர் எஸ். இராசசுந்தரம் மற்றும் சில காந்தீயத் தொண்டர்கள் ஆயுதப்படையினரால் அடுத்து அடுத்துக் கைது செய்யப்பட்டதின் பின்னர் காந்தீய இயக்கம் ஆற்றி வந்த சேவைகள் அத்தனையும் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

குறித்த இயக்கத்தின்சேவைகள் தொடர்ந்தும்செய்வதற்கு வவனியா பொலிசார் தடையாக இருக்கின்றனர் என்றும் காந்தீயத்தின் சமூக சேவைகள் தொடர்ந்தும் நடப்பதற்கு பொலிசார் இடையூறாக இல்லாமல் மீண்டும் சேவைகள் ஆரம்பிக்க வேண்டி இருப்பதால் அறிவுறுத்தல் வழங்கலாம் தாழ்த்தாது பொலிசாருக்கும் அறிவிக்குமாறு வவனியா எம். பி திரு தா. சிவசிதம்பரம் சமூக சேவைகள் அமைச்சர் திரு அசோகா கருணாரத்ன அவர்களுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

திரு. சிவசிதம்பரம் தமது கடிதத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

1976-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட காந்தீய இயக்கம் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளுக்கும், கர்ப்பவதிகளுக்கும் பால் உணவு விநியோகத்தைத் தொடர்ந்து செய்துள்ளது.

பலநூற்றுக்கணக்கான இறுவர் பாடசாலைகளையும் அகதிகள் புனர்வாழ்வு, குழந்தைகளின் கல்வித்தேவைகளுக்கும் தொண்டுசெய்து வந்துள்ளது.

குடிநீருக்குவேண்டிய கிணறுகளை அமைத்து சுகாதார சேவை அகதிகள் புனர்வாழ் நிலையத்தில் வாழ்கின்ற மக்களுக்கு விவசாயத்துக்குவேண்டிய ஒத்தாசைகள். இவற்றை எல்லாம் பல தர்ம நிறுவனங்களின் உதவியுடன் காந்தீய இயக்கம் செய்துவந்துள்ளது.

#### பாலர் பாடசாலைகள் இயங்கவில்லை

குழந்தைகளுக்கு விநியோகத்துக்குப் பெறப்பட்ட பால் உணவு மா கையிருப்பிலிருந்து பழுதடைகின்றது. பாலர் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு வேதனம் கொடுபடாததினால் பாடசாலைகள் இயங்க முடியாத நிலையில் இருக்கின்றது.

குறித்த இயக்கத்தின்சேவைகள் தொடர்ந்தும் செய்வதற்கு வவனியாப் பொலிசார் தடையாக இருக்கின்றனர். குறித்த சேவைகள் காந்தீய இயக்கத்தினால் தொடர்ந்தும் செய்யப்படவேண்டிய அவசியத்தைத் தங்களுக்கு நேரடியாக விளக்கியுள்ளேன்.

பதிவு செய்யப்பட்ட சமூக சேவை இயக்கமான காந்தீயத்தின் பணி தொடர்ந்தும் நடப்பதற்கு பொலிசார் இடையூறாக இருப்பதைத் தடுத்து சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கவேண்டிய அறிவுறுத்தலை காலம் தாழ்த்தாது எனக்குத் தருவதுடன் பொலிசாருக்கும் தெரியப்படுத்துமாறு வேண்டுகின்றேன். (க)

## சமாதான நீதவான்



(யாழ்ப்பாணம்)

மறவன்புலோ வள்ளக்குளம் வீரகத்திப்பிள்ளையார் கோயில் தருமபரிபாலகர் முருகேசு கணபதிப்பிள்ளை ஆற்றிய சமய சமூகப்பணிகளைக் கௌரவித்து அரசாங்கம் இவரைச் சமாதான நீதிவானாக நியமித்துள்ளது.

இவர் யாழ். இந்துக் கல்லூரித் தமிழ் வித்தியாசாலை உப-அதிபராகவும், நாவற்குளிக் கிராமசபை அங்கத்தவராகவும், மறவன்புலோ கிராம முன்னேற்றச் சங்கத் தலைவராகவும், மறவன்புலோ சனசமூக நிலையத்தலைவராகவும், மறவன்புலோ ஐக்கிய பண்டகசாலைச் செயலாளராகவும் சேவை புரிந்து சமய சமூக வளர்ச்சிக்கான பணிகளைச் செய்து ஊரார் உள்ளங்களில் இடம்கொண்டவர்.

சைவத் தமிழ் வளர்ச்சிக்கான திருமுறைகள், புராணங்கள் சித்தாந்த நூல்கள் முதலான பல நூல்களை அச்சிட்டு வெளியிட்டதோடு பல சைவசமய நூல்களை இலவச வெளியீடாக வெளியிட்டுப் பலரும் பயன்பெற உதவியுள்ளார்.

சாவ. கூட்டணி

## பொதுச்சபை நாளை கூடுகிறது!

(சாவகச்சேரி)

சாவகச்சேரித் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபை நாளை 3ம் திகதி சாவகச்சேரியில் கூடுகின்றது.

இக்கூட்டத்தின்போது, மன்னாரில் நடைபெறவுள்ள த. வி. கூ. மாநில மகாநாட்டுக்கான சாவகச்சேரித்தொகுதியின் பிரேரணைகள் பற்றியும் ஆராயப்படும். (க)

## நூலக சபை நிறுவப்பட்டது

(சாவகச்சேரி)

மாவட்ட அபிவிருத்தி சபையின் நாவற்குழி உப அலுவலக பொது நூல் நிலையத்தை அபிவிருத்தி செய்யவும், பாடநூல்கள் போன்றவற்றைச் சேகரிக்கவும், கொள்வனவு செய்யவுமென நூலக சபை ஒன்றினை, கோயிலாக்கண்டி கிராமோதயசபையின் பெருமுயற்சியினால் அங்குராரர்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

கிராமோதய சபைத்தலைவர் திரு. பொ. சுப்பையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. சி. குஞ்சிதபாதம், விசேட சேவை அலுவலர் திரு. தி. மகாலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (க)

## செலாவணி மாநாட்டு யோசனை நிராகரிப்பு

பாரிஸ் ஜூலை 1

அந்நிய செலாவணி சம்பந்தமாக சர்வதேசமாநாடு ஒன்றை கூட்ட வேண்டுமென்று பிரான்சும் ஏனைய சிலநாடுகளும் தெரிவித்த யோசனையை அமெரிக்கா நிராகரித்துள்ளது.

இன்றைய நிலையில் இம்மாநாடு வெற்றியளிக்கும் ஒரு நடவடிக்கையாக அமையாது என்று அமெரிக்கஅதிபர் றீகன் தெரிவித்திருக்கின்றார். (சூ)

# கடற்படைவீரர் ஆஸ்பத்திரியில்!

(திருகோணமலை)

திருகோணமலை கடற்படை முகாமைச்சேர்ந்த வீரர் இளசானந்தம் என்பவர் தாக்குதலுக்குள்ளாகி திருகோணமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு "மெஸ்ஸில்", இவர் நித்திரை செய்து கொண்டிருந்தபோது, சில சக கடற்படைவீரர்கள் வெளியே இழுத்துச்சென்று படுமோசமாகத் தாக்கியதாக புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடற்படை வீரர் திருமலை ஆஸ்பத்திரிபொலிஸில்கொடுத்துள்ள முறைப்பாட்டில், இரவு தான் நித்திரைசெய்துகொண்டிருந்தபோது, சில கடற்படை வீரர்கள் வந்துதன்னைவெளியே இழுத்துக்கொண்டு போய்படுமோசமாகத்தாக்கியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஐந்து சிங்களக் கடற்படை வீரர்களின் பெயர்களை அவர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையிலுள்ள "அனுராதபுரச்சந்தியிலுள்ள கடை பொன்று கொள்ளையடிக்கப்பட்டபோது, சம்பந்தப்பட்ட ஒருவரை சிவானந்தன் என்ற இந்தக்கடற்படை வீரர் தாக்கியதாகவும், இதன் எதிரொலியாகவே இவர் தாக்கப்பட்டதாகவும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

## ரூபவாஹினியில் இன்று

மாலை

| | | |
|---|---|---|
| 6-02 | – | ஆங்கில நிகழ்ச்சி |
| 6-15 | – | விளையாட்டு நிகழ்ச்சி |
| 6-30 | – | சிங்கள நிகழ்ச்சி |
| 7-00 | – | செய்தி மஞ்சரி (தமிழ் |
| 7-15 | – | கல்வி நிகழ்ச்சி |
| 8-15 | – | செய்தி மஞ்சரி [சிங்களம் |
| 8-30 | – | சிங்கள நிகழ்ச்சி |
| 9-00 | – | மேற்கத்திய இசை நிகழ்ச்சி |
| 9-30 | – | செய்தி மஞ்சரி (ஆங்கிலம்) |
| 945 | – | ஆங்கிலத் தொடர் சிறப்பு நிகழ்ச்சி |

யாழ்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்தாபனங்கள் மூடப்பட்டிருந்தன.

பொதுமக்கள் நடமாட்டம் வெகு குறைவாகவே காணப்பட்டது.

பிரயாணிகள் தொகை குறைந்திருந்ததால் இ.போ.ச. பஸ்கள், தனியார் பஸ்கள் குறைவாகவே சேவையிலீடுபட்டிருந்தன. இரவு 7 மணியுடன் பஸ்சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

நேற்று முழுநாளும் சினிமாத் தியேட்டர்களில் படக்காட்சிகள் நடைபெறவில்லை.

தனியார் கல்லூரிகளும் மூடப்பட்டிருந்தன. பிரதான சந்தைகளிலும் பாவனையாளர்கள் தொகை குறைவாகவே காணப்பட்டது.

வீதிகளில் ஜன நடமாட்டமும் வாகனங்களின் நடமாட்டமும் வழக்கம்போல் இருக்கவில்லை.

மாலை 6 மணிக்குப் பின்னர் நகரம் சோபையிழந்து காணப்பட்டது குறிப்பிடத்தக்கது. (மா)

ஆனைக்கோட்டையில்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சாரதியையும், நடத்துநரையும், பிரயாணிகளையும் இறக்கிவிட்டு, எண்ணை ஊற்றி தீவைத்துவிட்டு, இறங்கி தப்பி மறைவாகி விட்டதாகவும், சாரதியும், நடத்துனரும் பொதுமக்களும் உடனடியாக தண்ணீர் ஊற்றித்தீயை அணைத்துவிட்டதாகவும் பொலிஸ் விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது. (மா)

யாழ். மாவட்டத்தில்

# வங்கி ஊழியர் பற்றுக்குறை;

## பளையில் வேலைகள் நிறுத்தப்பட்டன!

### அடைவுபிடிக்கும் வேலைகளும் நிறுத்தம்

(பச்சிலைப்பள்ளி)

யாழ். மாவட்ட வங்கிகளில் ஊழியர்பற்றுக்குறை தொடர்கிறது. கடந்த திங்கட்கிழமை ஊழியர் பற்றுக் குறையினால் சில வங்கி அலுவலர்கள் பளை மக்கள் வங்கியில் நிறுத்தப்பட்டன. இதனால் பொது மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பியதுடன் நீண்டநேரம் நிற்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

மக்கள் வங்கி மட்டுமே தனித்து இருக்கும் பளையில், முகாமையாளர், உதவி முகாமையாளரைத் தவிர நான்கு ஊழியர்கள் மட்டுமே கடமை புரிகிறார்கள். கடந்த திங்கட்கிழமை ஒருஊழியர் மட்டுமே கடமைக்கு சமூகமளித்ததினால் வங்கியில் ஜனநெரிசல் அதிகமாகக்காணப்பட்டதுடன் நகை அடகு பிடிக்கும் வேலை திடீரென நிறுத்தப்பட்டது.

இத்தினால் பளை மக்கள் வங்கியில் அடிக்கடி ஏற்படுகின்றன என்று பொதுமக்கள் புகார் செய்கிறார்கள்.

1977-ம் ஆண்டுக்குப் பின்னர் யாழ். மாவட்டத்தில் புதிய வங்கி ஊழியர்கள் நியமனம் செய்யப்படவில்லை. 1977-ஆண்டில் யாழ். மாவட்டத்தில் கலவரங்கள் மூடப்பட்ட போது இங்கிருந்து சில ஊழியர்கள் வெளி மாவட்டங்களுக்கு மாற்றப்பட்டார்கள். திரும்பவும் 1978ம் ஆண்டு சில வங்கிகள் மீண்டும் யாழ். மாவட்டத்தில் திறக்கப்பட்ட போதும் மாற்றப்பட்ட ஊழியர்கள் திரும்பி யாழ். மாவட்டத்திற்கு அழைக்கப்படவில்லை. இதனாலேயே யாழ் மாவட்ட வங்கிகளில் பரவலாக ஊழியர் பற்றுக்குறை காணப்படுவதாக கூறப்படுகிறது. (க)

இன்று

## மெய்வல்லுநர் போட்டி

[மானிப்பாய்]

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயமாருடைய இல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை மாலை நடைபெறும்.

இப்போட்டி வித்தியாலய அதிபர் திரு வ. ஆறுமுகராசா தலைமையில் நடைபெறும். மானிப்பாய் வட்டாரக்கல்வி அதிகாரி திரு ச தனஞ்செயன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். [ப]

மன்னார் கூட்டணி மாநாடு

# குழு உறுப்பினர்கள் ஜூலை 5ல் கூடுவார்கள்!

(மன்னார்)

மன்னாரில் ஜூலை மாதம் 23, 24ம் திகதிகளில் நடைபெறவுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநில மகாநாட்டிற்கான ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான கூட்டம் ஒன்று இம்மாதம் 5ம் திகதி நடைபெறும்.

[மன்னார் எம். பி திரு பி. எஸ் சூசைதாசன் தலைமையில் அவரது இல்லத்தில் நடைபெறும் இக் கூட்டத்தில் மாநில மகாநாட்டிற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவென தெரிவு செய்யப்பட்ட சகல குழுக்களை சேர்ந்தவர்கள் கலந்து கொள்வார்கள். (க)

உங்கள் தாகத்திற்கு பருகுங்கள்

எமது கற்பகம் விற்பனை நிலையங்களில் தற்பொழுது விற்பனைக்கு வந்துள்ளது.

"பனம் பானம்"

பனம்பானம் சுகாதார முறைப்படி பனம் பழத்திலிருந்து தயாரிக்கப்பட்டது.
சுவை மிகுந்தது. தாகத்திற்கு ஏற்றது.
★ மொத்தவியாபாரிகளுக்குக் கழிவு உண்டு

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

7813

இணுவில் கந்தசாமி கோவில்

# தர்மகர்த்தாசபை தேர்தலை நடத்தக்கோரி மனு!

## எதிர்தரப்பில் பூர்வாங்க ஆட்சேபம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா சபையினர் சட்டவிரோதமாகவும் இருக்கின்றார்கள் என்றும் அவர்களது நியமனம் நீதிமன்றத்தினால் உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் எனவே புதிய தர்மகர்த்தா சபை தேர்தலை நடாத்த வேண்டுமென்றும் கோரி இணுவில் வேலுப்பிள்ளை துரையப்பா, செல்வர் தம்பி முத்து ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்ட மனு யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி சி. வி. விக்னேஸ்வரன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிர் மனுதாரர்கள் சார்பில் சட்ட சமர்ப்பணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதென்றும் அவற்றின் அடிப்படையில் கட்டளை வழங்குமாறும் கோரப்பட்டது.

குறித்த மனு சட்டரீதியில் அமையவில்லை என்றும் இம் மனுவை தாக்கல் செய்ய இரு மனுதாரருக்கும் சட்ட உரித்து இல்லை என்றும் பூர்வாங்க ஆட்சேபனையை எதிர் மனுதார் சார்பில் சட்டத்தரணி என். லோகேஸ்வரன் தெரிவித்திருந்தார்.

இந்த ஆட்சேபனையை ஆதரித்து தற்போதைய தர்மகர்த்தாக்கள் சபையினரின் சார்பில் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் சமர்ப்பணங்கள் சமர்ப்பித்திருந்தார்.

மேற்கூறிய சமர்ப்பணங்கள் அடிப்படையில் குறித்த மனுவை தள்ளுபடி செய்வதா? இல்லையேல் மனுவை ஏற்று விசாரணை நடத்துவதா என்பது பற்றிய தீர்ப்பு ஆகஸ்ட் 31-ம் திகதி வழங்கப்படும். (ம)

### ஆசிரியையின் தாலிக்கொடி ‘அபேஸ்!’

(வவுனியா)

நொச்சிகுளம் என்ற இடத்தில் பாடசாலை முடிந்து வீடு சென்றுகொண்டிருந்த ஒரு ஆசிரியையிடமிருந்து தாலிக்கொடியைப் பறித்துச்சென்றுள்ளனர்.

செட்டிகுளம் பிரிவில் நொச்சிகுளம் இருக்கிறது. இங்குள்ள பாடசாலையொன்றில் கல்வி கற்பிக்கும் திருமதி சாமிநாதன் என்பவருடைய தாலிக்கொடியே வீதியால் வந்துகொண்டிருந்தவர்களால் பறிக்கப்பட்டது. இதுசம்பந்தமாகப் பொலிஸில் புகார்செய்யப்பட்டுள்ளது.

### உதயசூரியன் படிப்பகத் திறப்புவிழா

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை உதயசூரியன் சனசமூகநிலைய படிப்பகத் திறப்புவிழா வரும் 3ம் திகதி நடைபெறவுள்ளது.

காங்கேசன்துறை சந்தை வீதியில் அமைந்துள்ள இந்த படிப்பகத்தை விழாவின் முதன்மை விருந்தினரான எதிர்க்கட்சி முதல்வர் திரு அ. அமிர்தலிங்கம் திறந்து வைப்பார். பிரபல தொழிலதிபர் திரு க. ஜெயபாலசிங்கம் மங்களவிளக்கேற்றி வைப்பார். மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினர் திரு. பி. இராசேந்திரம் கொடியை ஏற்றிவைப்பார்.

மருத்துவகலாநிதி திரு. க. கதிரவேலு தலைமையில் இவ்விழா நடைபெறும்.




## வேலைவாய்ப்பு மோசடி வழக்கில் 1ம் எதிரி விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் மத்திய கிழக்கில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி, இரு ஏஜென்சி ஸ்தாபனங்களின் பெயரில் பலரிடம் பதினாறரை லட்சம் ரூபா மோசடி செய்ததாக இரு சகோதரர்கள்மீது யாழ். நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் முதலாம் எதிரி விடுதலை செய்யப்பட்டார். 2-ம் எதிரிக்கும் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் இவ்வழக்கு விசாரணை நடைபெற்றது.

முதலாம் எதிரியான அளவெட்டியைச் சேர்ந்த நாகலிங்கம் அம்பலவாணர், கொக்குவிலைச் சேர்ந்த நாகலிங்கம் பாலசுப்பிரமணியம் ஆகிய இருவர்மீது யாழ். மாவட்ட விசேட குற்றப்புலனாய்வுப் பொலிஸ் பிரிவினரால் 40 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

ஏற்கெனவே விசாரணை செய்த சில வழக்குகளில் 2-ம் எதிரிக்கு எதிராகப் 10 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது தெரிந்ததே.

விடுதலை செய்யப்பட்ட முதலாம் எதிரி சார்பில் சட்டத்தரணி எஸ். லோகேஸ்வரன் ஆஜரானார்.

பொலிஸ்தரப்பில் சார்ஜன்ட் எஸ். பிள்ளை ஆஜரானார். (ம)

### கைக்கடிகாரங்களுடன் வந்தவர் கைது

(மட்டுவில்)

115 கைக் கடிகாரங்களுடன் கொழும்பிலிருந்து வந்த ஒருவர் ராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு சாவகச்சேரிப் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார்.

கொழும்பு வாசியான கே. மொகிதீன் என்ற மேற்படி நபர் மினிபஸ் ஒன்றில் வந்தபோதே ஆனையிறவில் நடைபெற்ற சோதனையின்போது இவர் கைதுசெய்யப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. கைக்கடிகாரங்களுடன் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ள இந்நபர் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகிறார்.

### யாருடைய லைசன்ஸ்?

யாழ்- மானிப்பாய் வீதியில் மோட்டார் சைக்கிள் லைசன்ஸ் புத்தகம் ஒன்று சிவன்கோவிலடி வீதியிலுள்ள எஸ். தினகரன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு, ‘ஈழநாடு’ காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

## இன்றைய பலன்

ஆனி 18-ம் திகதி
சனிக்கிழமை
(2-7-83)

மேடம்: வார்த்தை ஜாலம் செய்வதன்மூலம் மற்றவர்களை வசீகரிப்பீர்கள். எழுத்தாளர்களுக்கு சிறப்பான தினம். இருக்கும் இடத்தில் ஆதரவு பெருகும்.

இடபம்: மனையில் பூசல்கள் தோன்றி மறையும். தனிமையை விரும்புவீர்கள். தொழில்புரியும் இடத்தில் கண்டிப்பு வேலை நடைபெறும். நண்பர்களே சூழ்ச்சி வலை விரிப்பார்கள்.

மிதுனம்: நீண்டநாள் பிரச்னைக்கு இன்று நல்ல முடிவு ஏற்படும். தாய்வழி மூலம் தனவரவிற்கு இடமுண்டு. சிலருக்கு அதிர்ஷ்ட லாபங்களும் கிடைக்கலாம். முன்னேற்றமான தினம்.

கடகம்: புத்திரர்களால் புகழுக்கு இடமுண்டு. புதியபாதையில் நடைபோடுவீர்கள். நண்பர்களிடமிருந்து பிணைப்புக்கள் பலப்படும். பொதுவாக நல்ல தினம். ஆராய்ச்சியில் ஆர்வம் பிறக்கும்.

சிம்மம்: எதிர்பார்த்த முடிவில் ஏமாற்றம் தென்படும். உடன் பிறந்தவர்களாலேயே பல தொல்லைகள் தோன்றக்கூடும். சிலரின் பிடிவாத நடவடிக்கை ஆத்திரத்தை ஏற்படுத்தலாம்.

கன்னி: குடும்பப் பிரச்னைகளில் சுமுகமான நிலை தென்படும். சுற்றுலாவில் வேண்டியதைச் சாதிக்கக்கூடிய செல்வாக்குப்பெருகும். இல்லத்தில் இனிமை தவழும்.

துலாம்: வேண்டிய ஒருவரைப் பகைத்துக்கொள்ள நேரிடலாம். அவசரம் போக்கினால் ஆபத்துக்கள் விளையும். சிலர் வாழ்க்கையில் பிரிவுத் துயர் வாட்டும். சகோதரக் கவலை உண்டு.

விருச்சிகம்: மனம்போல வாழ்வு இன்று மலரும். கடமையாற்றுமிடத்தில் சகதொழிலாளர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். சிலருக்கு பதவி உயர்வுக்கும் இடமுண்டு.

தனு: புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும். தொழில்துறையில் புதிய சாதனை கருவாகும். மற்றவர்கள் ஆதரவு கிடைக்கும். நன்மையான இடமாற்றம் காணப்படும்.

மகரம்: பொருளாதார நிலை சீரடையும். சிலர் வாழ்க்கையில் எதிர்பாராத வரவிற்கு இடமுண்டு. பத்திரிகையாளர்களாயின் வேதனம் உயர்த்தப்படலாம்.

கும்பம்: அற்ப விடயத்திற்குக்கூட ஆத்திரமடைவீர்கள். நிதியில் முடக்கம் ஏற்படும். சிலர் வீண்பழிக்கு இலக்காவார். விஷமிகளின் தொல்லைகள் புதிய உருவெடுக்கும்.

மீனம்: அதிக ஆசையினால் அவஸ்தைப்படுவீர்கள். சிலர் வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ளலாம். சிலரின் குறுக்குவழித் தலையீடு உங்கள் கோபத்தைக் கிளறிவிடும்.

— சோதிடக்கலாநிதி —
திருமலை க. வேலுப்பிள்ளை

### நூல் வெளியீட்டு விழா

(கொழும்பு)

சேர். பொன்னம்பலம் அருணாசலம் எழுதிய ‘கற்கைகளும், மொழி பெயர்ப்புக்களும்’ என்னும் ஆங்கில நூலின் வெளியீட்டுவிழா இன்று சனிக்கிழமை காலை கொழும்பு சைவ மங்கையர் கழக கலைநிலையத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் நீதியமைச்சர் கலாநிதி நிஸங்க விஜேரத்ன பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

### 36 பேர் சித்தி

(சுண்டுக்குளி)

கலாச் சீணைக்கள காவலாளராக கடமையாற்றிசார்ஜன்ட் பதவிஉயர்வுக்கு நடந்த போட்டிப் பரீட்சையில் முப்பத்தாறு பேர் சித்தியடைந்தனர். அதில் ஐவர் தமிழர்கள்.

இவர்களில் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு இருபது பேர் தெரிவுசெய்யப்பட்டனர். அந்த இருபது பேரில் இருவர் மட்டுமே தமிழர்களாவர். அவர்கள் பெயர் பின்வருமாறு: திரு சி. ரீ. ஜெயரட்டினம் (யாழ்ப்பாணம்) திரு ஏ. அருளப்பு (மூல்லைத்தீவு)

## வேலைவாய்ப்பு மோசடி வழக்கு: எதிரிக்கு 5 ஆண்டு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத கடூழிய சிறைத்தண்டனை!

(மட்டுவில்)

“சமுதாயத்திற்கு நல்லவழிகாட்டிகளாக இருக்க வேண்டியவர்கள் உங்களைப் போன்ற படித்த வாலிபர்கள், சமுதாய இளைஞர்களை வழிதவறி நடமாற வைப்பவர்களாக மாறக்கூடாது. வெளிநாட்டு வேலையின் பெயரால் ஆசை காட்டுவதின் மூலமே, நாட்டில் திருட்டுகளும் மலிந்துள்ளது. எதிர்காலத்திலாவது நீர் திருந்தி எதிர்கால சமுதாயத்திற்கு நல்ல வழிகாட்டியாக இருப்பீர் என நம்புகிறேன். ஆகவே உமக்கு ஆறுமாத கடூழியச் சிறைத்தண்டனை விதித்து அதை ஐந்து ஆண்டுகள் ஒத்திவைப்புச் சிறைத்தண்டனையாக்கித் தீர்ப்பளிக்கின்றேன்.”

இவ்வாறு சாவகச்சேரி நீதவான் திரு என். யோகசிவமணி வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி வழக்கில் தீர்ப்பளிக்கும்போது கூறினார்.

இவ்வழக்கில் கொழும்பு கொம்பனித்தெருவைச் சேர்ந்த அன்டன் சேவியர் செல்வரத்தினம் என்ற வாலிபர், கடந்த ஆண்டு மே மாதத்தில், பனையைச் சேர்ந்த த. மயில்வாகனம் என்ற வாலிபரிடம், வெளிநாட்டில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி 17,000 ரூபாவை மோசடி செய்ததாக யாழ். விசேட குற்றத்தடுப்பு பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

சாவகச்சேரி நீதிமன்றத்தில் நீதவான் திரு. என். யோகசிவமணி முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிரி தரப்பில் சட்டத்தரணி சிவலோகநாதன் ஆஜரானார். வழக்கை விசேட குற்றத் தடுப்புப் பிரிவு சார்ஜன்ட் திரு. எஸ். தர்மலிங்கம் நடத்தினார்.

சட்டத்தரணி சிவலோகநாதன் தொடர்ந்து தனது தொகுப்புரையில் கூறியதாவது;

எனது கட்சிக்காரர் ஒருபடித்த வாலிபர். அவர் இங்குள்ள வாலிபர்களுக்கு வெளிநாட்டில் வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுத்து அவர்களை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வரவேண்டும் என்ற உயர்ந்த நோக்குடனேயே இதை ஒரு சேவையாகச் செய்துவந்தார். இவர் இந்தப் பணத்தைப் பெற்று தனது செலவிற்கு எடுக்கவில்லை. அந்த ஏஜென்சிக்கே கொடுத்துள்ளார். ஆனால் அந்த முகவர்தான் எனது கட்சிக்காரரை ஏமாற்றிவிட்டார். எதிர்காலத்தில் எனது கட்சிக்காரர் இப்படியான பிழைகளைச் செய்யமாட்டார்.

நீதவான் எதிரிக்கு புத்திமதி கூறி அவருக்கு 6 மாதக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார். அதை 5 வருடம் ஒத்திவைப்புச் சிறைத் தண்டனையாக மாற்றித் தீர்ப்பளித்தார். (ம)

### நகரசபை அங்கத்தவர் வீடு சோதனை

(வவுனியா)

வவுனியா நகரசபை அங்கத்தவருடைய வீடொன்று இராணுவத்தினரால் சோதனையிடப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணி அங்கத்தவரான சிவானந்தனின் வீடே இவ்விதம் சோதனையிடப்பட்டது;

வவுனியா பகுதியில் அமைந்துள்ள இவருடைய வீட்டுக்குள் சுமார் நூறு இராணுவத்தினர் சோதனை நடாத்தித் திரும்பிச் சென்றார்கள்.

### திருப்பணி வேலைகள்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை சங்கரத்தை அருள்மிகு ஸ்ரீ முருகமூர்த்தி கோவில்புனருத்தாரணத் திருப்பணி வேலைகள் ஸ்தபதி திரு தம்பிராஜா குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ராஜா (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
எம்.ஜி.ஆர்—ஜெயலலிதா
நீரும் நெருப்பும்
(ஈஸ்ட்மன் கலர்)

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 4-15 7-00
சனி, ஞாயிறு 1-30
ஜெய்சங்கர்
துணிவே துணை
(புதிய பிரதி)

Regal (Jaffna)
Daily 10-30, 2-30, 4-45, 7-00
2nd — 4th
Roger Moore in
"THE FICTION MAKERS"
[Action packed-thrill color]
Coming soon
'GIRL FROM INDIA'


# "முழங்காவிலை நகரமாக்க நடவடிக்கை எடுக்கப்படும்"

## அபிவிருத்திசபைத் தலைவர் உறுதி

(கிளிநொச்சி)

சகல துறைகளிலும் துரிதமாக அபிவிருத்தி அடைந்து வரும் கிளிநொச்சி நகரம் போல் முளங்காவிலையும் ஒரு பூரண அபிவிருத்தி நகராக மாற்ற சகல நடவடிக்கைகளும் எடுப்போம் என்று யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு எஸ். நடராசா உறுதியளித்துள்ளார்.

மகாதேவா தாய்சேய் அமைப்பு வேலை சிரமதானப் பணியில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

"தமிழ் மக்களே பெருமைப்படத்தக்க அளவில் இவ்வாறான பாரியபணியை இப்பகுதி மக்கள் தமது சொந்த வேலை போல் சிரமதானம் மூலம் பெரும் பகுதி வேலையைசெய்து முடித்தமையையிட்டு பெருமைப்படுவதாகவும் திரு நடராசா சொன்னார்.

"பூநகரி பரமன்கிராய்வெட்டுக்காடு இளம்பரிதிகிராமஇளைஞர் ஒன்றியம் இச்சிரமதானப் பணியில் ஓராண்டு நிறைவை பூர்த்திசெய்துள்ளது இதனைக் குறிக்கும் முகமாக சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட இளைஞர்கள்முழுநேர சிரமதானப்பணி செய்து இதுவரை செய்த சிரமதான வேலைகளுக்கு சிகரம் வைத்தாற்போல் 151உழவுயந்திர சுற்களை ஏற்றிஇறக்கியமை சாதனைக்குரிய ஒன்றாகும்.

யாழ் திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு, எஸ் சிவதாசன் கலந்துகொண்டு பேசுகையில் இலங்கையிலேயேசிரமதானம் என்பதற்கு புதுவடிவம் கொடுத்து இப்பாரிய வேலையைச் செய்ததொண்டர்களை மனமாரப்பாராட்டுகின்றேன் என்றார். இது மற்றவர்களுக்கும் ஒரு சிறந்த முன்மாதிரியாக இருக்க வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

பூநகரி மகாதேவா தாய்சேய் நிர்வாகப் பொறியியலாளர் திரு. சு. இராமகிருஷ்ணன் தமதுரையில் மகாதேவா தாய்சேய் அமைக்கும் வேலைகளில் பெரும்பகுதி பூர்த்தியடைந்துள்ளது. என்று தெரிவித்தார்.

மற்றும் பூநகரி உதவி அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம், பூநகரி ப. நோ. கூ. சங்கத்தலைவர் தி. இரசநாதன் ஆகியோரும் உரையாற்றினர் (கு-மா)


வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 10-15, 1-15, 4-15 7-00
பிரபு—சோபா
மூடுபனி

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
மணாளனே
மங்கையின் பாக்கியம்

ராணி தினசரி 10-30, 2-00, 6-00, 9-30,
(யாழ். நகர்)
ஜனத்திரள் நிறைந்த - 7வது வாரம்
கமலஹாசன் - அம்பிகா
சகல கலா வல்லவன்

ஸ்ரீதர் தினசரி 10-30, 2-00, 4-30, 7-00.
(யாழ். நகர்)
BRUCE LEE'S (Karate Film)
Exit the Dragon, Enter the Tiger

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
மனோகரா தினசரி 4 காட்சிகள்
(யாழ் நகர்) 2வது வெற்றி மாதம்
கமலஹாசன், ஜெய்சங்கர், ஸ்ரீதேவி
வாழ்வே மாயம் (ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 4-30, 7-00
His Partner brutally murdered......
His girl friend executed......
SEAN KANE is out for VENGENCE
CHUCK NORRIS in
An Eye For An Eye

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க குறிப்பிட்ட சில தினங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.
ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, ஜெமினி, பத்மினி, சாவித்திரி, விஜயா,
சரஸ்வதி சபதம்
(ஈஸ்மன் கலர்)
வெகு விரைவில் பாக்கியராஜ் நடித்த
அந்த ஏழு நாட்கள்

சாந்தி யாழ் 10.30, 2.30, 6.30 மட்டும்
இப்பொழுது மிகுந்த பரபரப்பூட்டி காட்சியளிக்கிறது!
ஜனத்திரள் நிறைந்த 51-வது வெற்றித்திருநாள்
பாலாஜியின்
சிவாஜி லட்சுமி மனோரமா தேங்காய்
தியாகம்
ஈஸ்ட்மென் வண்ண சித்திரம்
- மாதர்கூட்டம் திரண்டு வருகிறது -


மட்டுவில் சந்திக் கொலைவழக்கு:

# "சம்பவம் நடந்த இடத்தில் சான்றுப் பொருட்களை எடுத்தேன்"

## பொலிஸ் சார்ஜண்ட் சாட்சியம்

(மல்லாகம்)

கொலைபற்றிய தகவல் கிடைத்ததும் நான் எமது நிலைய அதிபர் இன்ஸ்பெக்டர் திரு. தென்னக்கோனுடன் ஆஸ்பத்திரிக்குச் சென்றேன், சம்பவம் நிகழ்ந்த இடத்திற்குச் சென்றேன். இன்ஸ்பெக்டரின் உத்தரவின்படி சான்றுப் பொருட்களைச் சேகரித்தேன், சாட்சியங்களையும் பதிவுசெய்தேன்.

இவ்வாறு பருத்தித்துறை மங்கிலிகிதர் சந்திரன் கொலை வழக்கில் சாட்சியமளித்த பொலிஸ் சார்ஜண்ட் திருநெல்வேலி புரம் செல்லையா கூறினார்.

சாவகச்சேரி நீதவான் திரு. என் லோகசிவமணி முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

இந்த வழக்கில் 83 ஜனவரி 1ம் திகதி மட்டுவிலைச் சேர்ந்தவரும் உடுப்பிட்டி கல்விமலை வங்கியும், பருத்தித்துறை இலங்கைவங்கி லிகிதருமான தாமோதரம்பிள்ளை சந்திரசேகரம் என்பவரை கல்வயலைச் சேர்ந்த செல்லப்பா சிவபாதம் என்பவர் மட்டுவில் மகாவித்தியாலய சந்தியில் வைத்து கிறீஸ்கத்தி ஒன்றால் குத்திக் கொலைசெய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது

சார்ஜண்ட் திரு. வி. செல்லையா தொடர்ந்து தனது சாட்சியத்தில்கூறியதாவது! சம்பவ தினம் காலை சுமார் 11-40 மணியளவில் எனக்கு இக்கொலைபற்றி தகவல் கிடைத்தது. உடனே நான் எமது பொலிஸ் நிலைய அதிபர் இன்ஸ்பெக்டர் தென்னக்கோனுடன் முதலில் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்குச் சென்றேன் அங்கு முதலாவது சாட்சி பொன்னம்பலம் கனகம்மாவின் சாட்சியத்தைப்பதிவு செய்தேன். மற்றும்சாட்சிகளையும் பதிவு செய்தேன்.

அங்கிருந்து கொலை நடைபெற்ற இடத்திற்குச் சென்றோம். சில சான்றுப்பொருட்களை பெற்றோம், சிலசாட்சியங்களையும் பதிவுசெய்தோம். பின் ஆஸ்பத்திரிக்குச் சென்று பிரேதபரிசோதனையின் போது சமூகமாக இருந்தேன். அதிலும் தேவையான சான்றுப் பொருட்களைச் சேகரித்தேன், பின் மரணவிசாரணையின் போது நான் சமூகமாயிருந்தேன் செல்லப்பா சின்னையா சாட்சியமளிக்க முன்வந்தார். இன்ஸ்பெக்டரின் உதவியுடன் அவரின் சாட்சியத்தை பதிவு செய்தேன், வேறும்பல சாட்சியங்களைப்பதிவு செய்தேன்.

இதைத்தொடர்ந்து 83ஜனவரி 10ல் எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது நீதவானின் அனுமதியுடன் அவரின் வாக்குமூலத்தை பதிவுசெய்தேன். ஸ்தலத்தைபரிசோதிக்கும் போது நான் ஓர் மாதிரிவரைபடத்தை தயாரிக்கவில்லை.

எதிரிசார்பில் சட்டத்தரணி திரு. செ, அப்பிளையாவனும் பொலிஸ் தரப்பில் சட்டத்தரணி, திரு. சுரேந்திரனின் அனுசரணையுடன் சட்டத்தரணி திரு. வி, செல்லத்தம்பியும் ஆஜரானர். வழக்கு அடுத்தமாதம் 6ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது

## புதுச்சேரியில் கதவடைப்பு

சென்னை ஜூலை 1

புதுச்சேரியில் ராஷ்டிரபதி ஆட்சி அமுல் படுத்தியதை கண்டித்து 9 எதிர்க்கட்சிகள் நேற்றுஅனுசரித்த கதவடைப்புப் போராட்டம் அமைதியாக நடைபெற்றது.

இந்தகதவடைப்பினால் எந்தவித குழப்பமும் ஏற்படவில்லை எனத் தெரிகிறது. மாட்சாலை அரச அலுவலகங்கள் வழமைபோல் இயங்கின. பஸ்சேவைகளும் பெருமளவு பாதிக்கப் படவில்லையெனத் தெரிகிறது. (கு)

## விரிவுரையாளர்



[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியில் புவியியற் றுறை ஆசிரியராகக் கடமை ஆற்றும் திரு. எஸ். பத்மநாதன் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சமூகக் கல்வி விரிவுரையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் புவியியல் சிறப்புப் பட்டதாரியாகிய இவர் அதே பல்கலைக் கழகத்தில் துணை விரிவுரையாளராகவும் கடமையாற்றி உள்ளார். கல்வி டிப்ளோமா நெறியில் திறமைச் சித்தி பெற்று யாழ். பல்கலைக்கழகத்தில் எம் ஏ. பட்டத்திற்கான ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளார்.

## வருடாந்த இல்லப் போட்டி

[யாழ்ப்பாணம்]


கொக்குவில் நடேஸ்வரக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் கல்லூரி அதிபர் திரு ராஜன் கதிர்காமர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில்பிரதமவிருந்தினராக டாக்டர் பி இரத்தினசபாபதியும், திருமதி இரத்தினசபாபதியும் கலந்து கொள்ளவுள்ளனர். [ஜெ]

## இன்னிசை கதம்ப நிகழ்ச்சி

[யாழ்ப்பாணம்]

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இளம் கலைஞர் வளர்ச்சிக்காக வேஷ்யா கிரியேஷன்ஸ் வழங்கும் 'தேன் சிந்தும் மலர்' நாடக இன்னிசை கதம்ப நிகழ்ச்சியில் தென் இந்தியக் கலைஞர்கள் பங்குபற்றும் இன்னிசை நிகழ்ச்சியும் 'இலங்கை வேந்தன்' குழுவினரின் சட்டநாணவர்கள் பங்குபற்றும் 'தூக்கு மேடை' (வரலாற்று நாடகம்) சிறப்பு நிகழ்ச்சியாக நாளை இடம் பெறுகிறது. வரலாற்று நாடகத்தில் ஒரு கட்டத்தை படத்தில் காணலாம்.



# திருமலையில் வன்செயல் தொடருமானால் ராஜினாமா செய்வேன்!

## மாவட்ட அமைச்சர் நெல்சன் அறிவிப்பு

(திருகோணமலை)

"தமிழ் மக்கள் கொடூரமாகத் தாக்கப்படுகிறார்கள்; துப்பாக்கிச்சூட்டுக்கு ஒரு வயதுக் குழந்தை துடிதுடித்து மாண்டது. நான்கு வயதுக் குழந்தை கருகிச் செத்தது. சிங்கள மக்கள் எவருமே இதுவரை கொலை செய்யப்படவில்லை. திருமலையில் தமிழ் மக்கள் படும் சித்திரவதையை என்னால் பொறுத்துக்கொண்டிருக்க முடியவில்லை. இந்நிலை நீடிக்குமானால் நான் என் திருமலை மாவட்ட அமைச்சர் பதவியை மட்டுமல்ல, பொலநறுவை எம். பி. பதவியையும் ராஜினாமாச்செய்யத் தீர்மானித்துவிட்டேன்" என்று கண்கலங்கியபடியே நேற்று உணர்ச்சிவசப்பட்டுக் கூறினார் திருமலை மாவட்ட அமைச்சர் திரு. எச். ஜி. பி. நெல்சன்.

நேற்று திருகோணமலையில் மாவட்ட அமைச்சர் அலுவலகத்தில் சமரச மகாநாடு ஒன்று நடைபெற்றது. இம் மகாநாட்டில் மாவட்ட அமைச்சர் நெல்சன் பேசுகையில், தமிழர் நிலையை திருகோணமலையில் எனக்குப் பார்க்கும் போது அழுகை வருகிறது" என்று கூறினார்.

இம் மகாநாட்டில், திருகோணமலை ஐ.தே.க. அமைப்பாளர் திரு வி ஆர். தவராஜா, கோணேஸ்வர ஆலய பரிபாலகர் எம். செல்வராசா. திருமலை நகரசபை ஐ. தே. க. உறுப்பினர் திருவாளர்கள் மாணிக்கவாசகர், சட்டத்தரணிகள் சச்சிதானந்தம், மாதவராசா, ஆர் சந்திரபாலன், வ. எஸ். இஸ்மாயில், சகோதரர் றிச்சார்ட், திருமலை அரசாங்க அதிபர் திரு. சுபிலஸ் பெர்னாண்டோ, மேலதிக அரசாங்க அதிபர் திரு. என் பத்மநாதன், விசேட பொலிஸ் அதிபர் திரு. தர்மதாச சில்வா, டி ஐ ஜி. மிராஆரியசிங்க மற்றும் சிங்களப் பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

மாவட்ட அமைச்சர் திரு நெல்சன் பேசுகையில் திருமலை சம்பவங்கள் என்னை மிகவும் கவலையில் ஆழ்த்திவிட்டது. ஒரு குறிப்பிட்டவர்கள் மோசமாகத் தமிழ்மக்களைத் தாக்கி அவர்களை மிகவும் பாதிப்படையச்செய்துவிட்டார்கள். இதை நாம் அனுமதிக்கக்கூடாது; இடம் கொடுக்கவும் கூடாது. இரண்டு இனமும் இந்தப்பூமியில் சமாதானமாக வாழ வழிசெய்யவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

பதினைந்து சமாதானக் குழுக்கள் நிறுவப்பட்டன. மூன்று இனத்தைச் சேர்ந்தவர்களும் இக் குழுக்களில் அங்கத்தவர்கள்.

### கடற்படை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தொடர்ந்து இந்த நியமனம் செய்யப்பட்டுள்ளது.

றெயார் அட்மிரல் அசோக டி சில்வா நேற்று திருகோணமலைக்கு செல்வதற்கான ஏற்பாடுகளை செய்துகொண்டிருந்தார்.

# திருமலையில் நேற்று மட்டும் 50 வீடுகள் தீக்கிரை!

## அகதிகளுக்கு அமிர்தலிங்கம் ஆறுதல்

(திருகோணமலை நிருபர் வி. வி சுந்தரம்)

திருகோணமலையில் ஊரடங்குச்சட்டம் அமுலிலிருந்த நேற்று அதிகாலை 50 வீடுகள் தீக்கிரையாகின!

நொச்சிகுளம் என்ற இடத்தில் 24 வீடுகளும், சீனக்குடாவில் 26 வீடுகளும் இவ்விதம் எரிக்கப்பட்டு, சாம்பராகின.

இந்த வீடுகளில் வாழ்ந்தவர்கள் உடமைகளை இழந்த நிலையில் குழந்தை குட்டிகளோடு பொது இடங்களில் தஞ்சம்புகுந்துள்ளனர்!

திருகோணமலை மத்தியவீதியில் இரண்டு கடைகள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டுள்ளன.

திருகோணமலையில் நான்கு முகாம்களில் ஆயிரத்துக்கு மேற்பட்ட அகதிகள் குடும்பங்களாக இப்போது இருந்து வருகின்றனர்!

தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர்நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்றுக் காலை திருகோணமலைக்கு வந்திருந்தார். இவர் திருகோணமலைக்கு வரும் வழியில், நொச்சிக்குளம் அரசினர் தமிழ்கலவன் பாடசாலையில் தஞ்சம் புகுந்திருந்த இருநூறுக்கு மேற்பட்ட அகதிகளை சந்தித்து ஆறுதல் கூறினார்.

திரு. அமிர்தலிங்கம், திருமலை எம். பி. இரா. சம்பந்தன் வீட்டில் நேற்றுத் தங்கியிருந்து பல அகதிகளையும் சந்தித்துப் பேசினார். பல இடங்களுக்கும் நேரில் சென்று பார்வையிட்டார்! தனது உத்தியோகபூர்வ காரில் வந்தார். அமிர் நேற்றுமாலையே திரும்பிவிட்டார். பாதுகாப்புப்படையின் உதவியோடு தங்கள் வீடுகள் கொளுத்தப்பட்டதாகவும், தாங்கள் அனுபவித்த கஷ்டங்களையும் அமிருக்கு கண்கலங்கியபடியே எடுத்துக்கூறினார்கள் அகதிகள்.

திருகோணமலையிலிருந்து பதினெட்டாவது மைல் தூரத்தில் உள்ளது நொச்சிகிராமம். இங்கு அரசினர் தமிழ்கலவன் பாடசாலையில் அகதிகளாக இருப்பவர்களுடன், வெள்ளைமணல் கிறிஸ்தவ தேவாலயத்திலும், பாலையூற்று கிறிஸ்தவதேவாலயத்திலும், இன்னொரு திருமலையிலுள்ள பாடசாலையிலுமாக சுமார் ஆயிரம் அகதிகள் இருக்கின்றார்கள்.

இவர்களுக்கு அரசாங்க அதிபர் ஒரு வாரத்துக்கு ரேஷன் அரிசி வழங்கும்படி உத்தரவிட்டுள்ளார்.

இதுவரைகாலமும் தேடிய சகலவற்றையும் இழந்து, வெறுங்கையோடு வந்த அகதிகளுக்கு உடுபுடவைகள் வழங்கவும் சமூகசேவைப்பகுதி நடவடிக்கை எடுத்துள்ளது.

## "சமாதான மகாநாடா? அதில் அர்த்தமில்லை!"

### அழைப்பை நிராகரித்தார் திருமலை எம். பி.

[திருகோணமலை]

சமாதான மகாநாட்டின் அர்த்தமென்ன? இரண்டு கோஷ்டி சண்டைபிடித்தால் சமாதான மகாநாடு நடத்தலாம்; ஒரு கோஷ்டி அடிக்கிறது; வன்செயலை நடத்துகிறது; கொலைகளைச் செய்கிறது; சமாதானம் செய்ய என்ன இருக்கிறது?

இவ்வாறு நேற்று மாவட்ட அமைச்சர் கூட்டிய சமாதான மகாநாட்டுக்குத் தன்னை அழைத்த திருமலை அரசாங்க அதிபரின் பிரதிநிதியான உயர் அதிகாரியிடம் இவ்வாறு கூறினார் திருகோணமலை எம். பி. திரு. இரா. சம்பந்தன்.

இவரைப்போலவே திருமலை நகரசபைத் தலைவர் திரு. இரா. விக்கினேஸ்வரனும், மாவட்டசபைத் தலைவர் திரு. அ. தங்கத்துரையும் அவரிடம் சொல்லி மகாநாட்டு அழைப்பை நிராகரித்தனர்.

நேற்று நடந்த சமாதான மகாநாட்டில் இவர்கள் மூவரும் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஐ. தே. க திருமலை நகரசபை அங்கத்தவர்கள் தலைவர் டாக்டர் இவானந்தனும் இம் மகாநாட்டில் கலந்து கொள்ளவில்லை.

---

### புதிய எம். பி.

[கொழும்பு]

கடுவெல புதிய எம். பியாக திரு ஈ பி பெரேரா நேற்று நியமிக்கப்பட்டுள்ளார். ஐ. தே. க. வைச் சேர்ந்த திரு. எம். டி. எச். ஜெயவர்த்தன ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து இந்த ஆசனம் காலியாக இருந்தது.

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னத்துரை நல்லமுத்து

சின்னத்துரை - நல்லமுத்து காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும் இராசரத்தினம் (இரத்தினம் மில், ஸ்ரேசன் றோட், சுன்னாகம்), காலஞ் சென்ற பூபாலசிங்கம், பொன்னம்பலம், குணரத்தினம், திருமதி சற்குணம், சின்னம்மா ஆகியோரின் அன்புத்தாயாரும், சுமதி, மதி, சுமணதாஸ், சோமதி, விஜி, குணகுலன், குணராசா, சதீஸ்வரன், சந்திரமோகன் ஆகியோரின் பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியை [2-7-83] இன்று சனிக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக சுன்னாகம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:-

இ. இராசரத்தினம்,
(இரத்தினம் மில்)

7819

## இன்று நடக்கும் மெய் வல்லுநர் போட்டி

(சுன்னாகம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று நடைபெறுகிறது.

இப்போட்டியில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற சுகாதார அத்தியட்சகர் திரு. இரத்தினசபாபதி கலந்து கொள்கிறார்.

திருமதி இரத்தினசபாபதி பரிசில்களை வழங்குவார்.

### பெற்றோல்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டுவந்த தண்ணீர் பவுசரினாலும் இத் தீயை அணைக்க முடியவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து தபால்ரயில்சேவை நடைபெறவில்லை.

யாழ் பொலிஸ் அதிபர் ரி. இ. ஆனந்தராசா, இராணுவ அதிகாரிகள் ஆகியோர் தலத்துக்குச் சென்று பார்வையிட்டனர்.

எரிந்த புகையிரத எஞ்ஜின்களும் புகையிரதநிலையத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

### பெற்றோல் கொள்ளை

கல்வியங்காட்டிலுள்ள தனியார் எரிபொருள் விற்பனை நிலையத்தில் துப்பாக்கிமுனையில் சுமார் 650 ரூபா பெறுமதியான பெற்றோல் பட்டப்பகலில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை எஸ். தம்பிஐயாவுக்குச் சொந்தமான எரிபொருள் விற்பனை நிலையத்திலேயே பெற்றோல் கொள்ளையடிக்கப்பட்டது. சுமார் பதினேழு இனந்தெரியாத நபர்கள் இக் கொள்ளையை நடாத்தியிருக்கின்றனர்.

### திருகோணமலையில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

50 பேரடங்கிய பயங்கர ஆயுதக் கோஷ்டியினராக இக்கிராமத்திற்குள் நுழைந்து வர்கள் பெருத்த அட்டகாசத்தை நிகழ்த்தினார்கள்.

இரத்தினராசா என்ற 8 வயதுச் சிறுவன் மண்டையில் பலத்த வெட்டுக் காயத்துடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டான்.

முத்துலட்சுமி (30 வயது) நெஞ்சில் கத்திக் குத்துடனும், தெய்வானை (26 வயது) கழுத்தில் வெட்டுக் காயத்துடனும், முத்துக்குமாரி கழுத்தில் வெட்டுக் காயத்துடனும் அனுமதிக்கப்பட்டனர்.

## கதிர்வேலாயுதசுவாமி கோவிலில் இன்று

(யாழ்ப்பாணம்)

மண்ணார்பண்ணை ஸ்ரீசெந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் இன்று சனிக்கிழமை எட்டாவது நாள் ஈழத்து திருச்செந்தூர் முருகனுக்கு காலை 7-15 மணிக்கு ஸ்நபனாபிஷேகமும் சண்முகார்ச்சனையும், மாலை 5-30 மணிக்கு சந்தனக்காப்புச் சாத்தப்பெற்று ஷண்முகார்ச்சனையும் திருவிழாவும் நடைபெறும்.

### நாளைய நிகழ்ச்சிகள்

ஞாயிற்றுக்கிழமை காலை 5-30 மணிக்கு சமிசபூஜை 10-00 மணிக்கு சங்காபிஷேகம். 10-30 மணிக்கு ஷண்முகார்ச்சனை [லஷார்ச்சனை பூர்த்தி] 11-00 மணிக்கு தாராஹோமம் நடைபெறும். நண்பகல் 12-00 மணிக்கு மகேஸ்வர பூஜை (அன்னதானம்) நடைபெறும்.

அன்றுமாலை 5 மணிக்குபூஜையைத் தொடர்ந்து மாணவர் அக்கோலமும் திருக்கல்யாணமும் நடைபெறும். இரவு 6-30 மணிக்கு ஸ்ரீ செந்தில் கதிர் வேலாயுதப்பெருமான் வள்ளி தேவசேனா சமேதராகப் பூந்தண்டிகையில் வெளிவீதி வலம் வருவார்.

## மரண அறிவித்தல்

### திருமதி கலாவதனி - றிச்சேட்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பைச் சேர்ந்த திருமதி கலாவதனி றிச்சேட் அவுஸ்திரேலியாவில் காலமானார். இவர் திரு. S. றிச்சேட் அவர்களின் அன்பு மனைவியும், திரு. A. R. தம்பித்துரை (A. D. R Land Registry Jaffna), காலஞ்சென்ற திருமதி ஜானகி தம்பித்துரை (இளைப்பாறிய தலைமை ஆசிரியை) அவர்களின் அருமை மகளும், திரு. J. சோமசுந்தரம், திருமதி சவிரியாச்சி—சோமசுந்தரம் அவர்களின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற திரு. G தம்பித்துரை (செக்கர்) யின் பேத்தியும், சந்திரசேனனின் அன்புச் சகோதரியும், திருமதி ஸ்ரெலா சரவணமுத்து, திரு S. அல்பேட் (லண்டன்), திரு S. றொபேட் (லண்டன்), திருமதி யூலியட் நடராஜா ஆகியோரின் மைத்துனியும், திரு. C. சரவணமுத்து, திருமதி மீரியம், திருமதி சாந்தி, திரு. T. நடராஜா ஆகியோரின் சகோதரியுமாவார். அன்னாரது பூதவுடல் நல்லடக்கத்துக்காக ஞாயிற்றுக்கிழமை (3-7-83) மாலை 4-30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்படும்.

"வைற் கவுஸ்", கீரிமலை றோட்,
பண்டத்தரிப்பு.

7822

இப்பத்திரிகை: "ஈழநாடு" லிமிடெட் அதிபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு ஜூலை மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Poat Office Sri Lanka, under nnmber B 100236/81: Eelanadu-P. O. Box: 49, Telcgram: Eelanadu, Telephone: 22389 — 24126.